PUBLIC LIBRARY
JAFFNA

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876


St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை

மலர்: 135 இதழ்: 12 பக்கங்கள்: 08 திகதி: 19-06-2011 விலை: 15.00

## சொந்த முயற்சியினால் மட்டுமே மீளக்குடியமர்ந்த மக்கள் முன்னேற வேண்டிய நிலை; உதவிகள் இல்லை

### இயல்பு நிலைக்கு திரும்ப 25 ஆண்டுகள் செல்லும் என்கிறார் - யாழ் ஆயர்



**இடம்பெயாந்து மீளக்குடியமாந்த மக்கள் தங்கள் சொந்த முயற்சியினாலேயே இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டிய நிலை உள்ளதாக யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சொளந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.**

யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் சென்று விட்ட போதும் இடம்பெயர்ந்து வவுனியா முகாமில் உள்ள மக்களுக்கும், மீளக் குடியமர்த் தப்பட்ட மக்களுக்கும் இன்னமும் போதிய உதவிகள் அடிப்படை வசதிகள் எதுவும் உரிய முறையில் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் ஆயர் சுட்டிக்காட்டினார். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த ஊடகவியலாளர்களை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆயர் இல்லத்தில் கடந்த 16ஆம் திகதி மாலை சந்தித்து சமகால நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடினார். ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த ஆயர் மீளக் குடியமர்ந்த மக்களின் வாழ்க்கை நிலைமைகளை விபரித்து கூறி கவலை வெளியிட்டார்.

ஊடகவியலாளர்களுக்கு தொடர்ந்து விளக்கமளித்த ஆயர் மேலும் தெரிவிக்கையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுடன் தற்போதைக்கு அரசியல் பேச முடியாது. அதனை கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை. அவர்களுக்கு தற்போதைக்கு தேவைப்படுவது நிவாரணங்கள் மாத்திரமே.

பிள்ளைகளுக்கு சத்தான உணவுகளை கொடுக்க வேண்டும், அவர்களை படிப்பிக்க வேண்டும், தொழில் துறைகளில் ஈடுபட வேண்டும், இடிந்துபோன தங்கள் வீடுகளை திருத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இதுதான் அவர்களுடைய

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## குருத்துவ வெள்ளி விழாக் காணும் நமது அருள்தந்தையர்கள்



**அருட்பணி. இராஜேந்திரம் ஸ்ரலீன்**

**பணியாற்றிய பணித்தளங்கள்**

இளவாலை 1986 - 1987
கிளிநொச்சி 1987 - 1988
யாழ் பேராலயம் 1988 - 1989
ஊறணி 1989 - 1993
முகமாலை 1993 - 1997
நாரந்தனை 2002 - 2003
பாஷையூர் 2004 - 2007
பல்கலைக்கழகம் 2007 முதல்
(ஆன்மகக் குரு விரிவுரையாளர்)



**அருட்பணி. ஜெறாட் சவிரிமுத்து**

**பணியாற்றிய பணித்தளங்கள்**

மயிலிட்டி - ஊறணி 1986
பரந்தன் 1987
சவேரியார் குருத்துவக் கல்லூரி (உருவாக்குநர், விரிவுரையாளர்) 1988 - 2011
உயர்கல்வி 1992- 1995 (பாப்பிறை குருத்துவக் கல்லூரி, புனே, இந்தியா)
உயர்கல்வி பெல்ஜியம் 2003 - 2006



**அருட்பணி. ரூபன் மரியாம்பிள்ளை**

**பணியாற்றிய பணித்தளங்கள்**

யாழ் பேராலயம் 1986 - 1987
மண்டைதீவு 1987 - 1988
கரம்பொன் 1988 - 1991
உயர் கல்வி 1991 - 1992
அரியாலை 1992 - 1993
நிதியாளர் - சவேரியார் குருத்துவக்கல்லூரி 1993 - 1997
சுண்டுக்குளி 1997 - 1999
அதிபர் கத்தோலிக்க அச்சகம், ஆசிரியர் - பாதுகாவலன், இயக்குனர் - சமூகத்தொடர்புகள் ஆணைக்குழு 1997 - 2007
பல்கலைக்கழகம் 2005 - 2008
உயர் கல்வி இங்கிலாந்து 2008 - 2010
இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் யாழ்ப்பாணம்
பலகலைக்கழகம் 2011முதல்



**அருட்பணி. சந்திரன் யேசுதாசன்**

**பணியாற்றிய பணித்தளங்கள்**

மானிப்பாய் 1986 - 1987
கரம்பன் 1987 - 1988
நாரந்தனை 1988 - 1990
பண்டத்தரிப்பு 1991 - 1992
சவேரியார் குருமடம் 1992 - 1994
உயர் கல்வி இந்தியா 1994 - 1997
அரியாலை, விரிவுரையாளர்
சவேரியார் குருமடம் 1997 - 2000
உயர்கல்வி பிரான்ஸ் 2000 - 2003
சுண்டுக்குளி 2003 - 2007
உயர்கல்வி இந்தியா 2007 - 2009
நெவர்மறைமாவட்டம், பிரான்ஸ் 2009 முதல்.



**அருட்பணி. கிறிஸ்ரி செல்வறாஜ்**

**பணியாற்றிய பணித்தளங்கள்**

நாரந்தனை 1986 - 1987
உரும்பிராய்
கிளிநொச்சி
முல்லைத்தீவு
கரவெட்டி
வாழைச்சேனை
புளியடிக்குடா (மட்டு மறைமாவட்டம்)
கனடா - ஆன்மீகப் பணி



**அருட்பணி. செபஸ்ரி நீக்கிலாஸ் அ.ம.தி**

**பணியாற்றிய பணித்தளங்கள்**

தொடர்பகம் மறை உரைஞ்ஞர் 1986
நாரந்தனை 1990
யாழ் பேராலயம் 1990
அ.ம.தி சிறிய குருமடம் 1991 - 1993
அமதிபுரம் 1994
மடுத்திருத்தலம் 1995 - 1996
உயர்கல்வி மணிலா இந்தியா 1996 - 1998
தலைமன்னார் 1998 - 2000
ஆன்மீகப்பணி மடுத்திருப்பது 2000 - 2001
அமல மரித்தியாகிகளின ஆவண காப்பாளர் 2001- 2011



**அருட்பணி. பிரான்சிஸ் சந்திரபோஸ் குருஸ்**

**பணியாற்றிய பணித்தளங்கள்**

பாஷையூர் 1986 - 1988
மண்டைதீவு 1988 - 1990
சுண்டுக்குளி 1990 - 1992
புதுக்குடியிருப்பு 1992 - 1998
உயர்கல்வி (ரோம்) 1998 - 2000
அமதிபுரம் கிளிநொச்சி 2001 - 2004
திருநெல்வேலி 2004 முதல்

**எமது மறைமாவட்ட வளர்ச்சிக்காக பல்வேறு நிலைகளில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகள் போர் சூழலில் அரும் பணியாற்றிய எம் குருக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு குருத்துவப் பணிவாழ்வில் மேலும் வளர்ந்து உயர்ந்திட இறையருள் வேண்டுகின்றோம்.**

## கல்பிட்டி சுற்றுலாப் பயணிகளிற்கென அரசு திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகளுக்கு குருக்களும் சமூக நல ஆர்வலர்களும் எதிர்ப்பு

புத்தளம் கல்பிட்டி பகுதியில் உள்ள 14 சிறுதீவுகளில் சுற்றுலாப் பயணிகளுக்கென அரசு திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகளை குருக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் எதிர்த்து வருகின்றனர்.

அரசின் இந்த திட்டங்களால் இத்தீவுகளில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் 10,000 மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்று இத்திட்டங்களை எதிர்க்கும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

'கல்பிட்டி சுற்றுலாப் பகுதி' என்று அழைக்கப்படும் இந்த திட்டத்தில் உள்ளடங்கியப் பகுதிகளில் வாழும் மக்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் எதிர்காலத்தை எண்ணி பயந்து வாழ்கின்றனர் என்று அருட்பணி சறத் இன்டமல்கொட பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

இத்திட்டங்களால் அப்பகுதிகளில் நுழைந்துள்ள பல தனியார் நிறுவனங்கள் ஏற்கனவே அப்பகுதியில் சுற்றச்சூழலுக்கு ஆபத்து விளைவிக்கும் பல முயற்சிகளில் இறங்கியுள்ளனர் என்று சமூக நல ஆர்வலர்கள் செய்தியாளர் கூட்டத்தில் கூறினர்.

1673 ஹெக்டேர் நிலப்பரப்பைக் கொண்ட இந்த 14 சிறு தீவுகளில் வாழ்பவர்களில் பெரும் பாலானோர் கத்தோலிக்கர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் என்பது குறிப்பிடததக்கது.

## ஆசிரியர் பக்கம்

# ஏமது எண்ணம்

### காவலன் அன்பு நெஞ்சங்களே!

முதற்கண் பாதுகாவலன் ஊடாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையின் முதல் கத்தோலிக்க தமிழ் வார இதழாகிய "பாதுகாவலன்" இன்று நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கு மேலாக இறை சத்திய விசுவாசத்தை இலங்கை தமிழ் திருச்சபையிலும் ஏன் தமிழ் உலக திருச்சபையிலும் அழியவிடாது காவியும், வளர்த்தும் வந்துள்ளது. காலத்துக்கு காலம் பல மூத்த முதிர்ந்த அறிவும் ஞானமும் உள்ள குருக்கள் – பொதுநிலையினர் இப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று தமது ஆற்றலாலும் இறைவழிகாட்டலினாலும் பாதுகாவலன் பத்திரிகையை வளர்த்து வந்துள்ளனர்.

இப் பத்திரிகையின் ஆசிரியர் பணி தற்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தயக்கத்துடனும், சற்று அச்சத்துடனுமே இப்பணியை ஏற்றுக்கொள்கின்றேன்.

சிறிது காலம் இப்பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றிய அனுபவத்துடனும் வாசகர்களாகிய உங்கள் முழுமையான ஒத்துழைப்பும், வழிகாட்டலும், ஆலோசனைகளும் என்றும் கிடைக்குமென்ற நிறைவான நம்பிக்கையுடனுமே இப்பணியை ஏற்கின்றேன். இது என்பணியல்ல, எம் பணி.

"உலகு எங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற எம் பெருமான் இயேசுவின் அழைப்பு பணிகுருத்துவத்திலும், பொது குருத்துவத்திலும் பங்கேற்கும் எம் ஒவ்வொருவரின் அழைப்பாகும். ஆகவே உங்களின் முழு ஆதரவையும் பாதுகாவலனுக்கு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

உங்களை மிக விரைவில் உங்கள் பங்குகளில் சந்திக்கவுள்ளேன். "பாதுகாவலன்" 'சிறுவர் காவலன்' 'இளையோர் காவலன்' 'காவலன் குடும்பங்கள்' என்ற முகங்களுடன் அமையவுள்ளது. அதற்கான உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.

உங்கள் பங்குகளில் பாடசாலைகளில் நடைபெறும் ஆன்மீக – சமூக நிகழ்வுகளின் செய்திகளை தெளிவான படங்களுடனும் பங்குத்தந்தையின் மேலொப்பத்துடனும் அனுப்பி வையுங்கள். பங்கு தந்தையின் கவனமின்றி அனுப்பப்படும் செய்திகள் பிரசுரிக்கப் படமாட்டாது.

ஏற்கனவேயுள்ள பங்கு நிருபர்களை ஒன்று சேர்த்து புதியவர்களையும் இணைத்து அவர்களை பயிற்றுவிப்பதும் எம் எதிர்காலத்திட்டமாக அமையும். எனவே உங்கள் முழு ஒத்துழைப்பையும் மீண்டும் நாடி நிற்கின்றேன்.

**இயேசுவின் நற்செய்தி,**

அவரது மதிப்பீடுகள் அவனியில் தழைத்திட தொடரும் 'பாதுகாவலன்' பயணத்தில் நமது பங்கையும் முனைப்புடன் ஆற்றிடுவோம்.

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

**எம்முடன் தொடர்புகொள்ள**
"ஆசிரியர்" - பாதுகாவலன்
த.பெட்டி இல-02,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 2378, 021 321 4005
தொலைநகல்: 021 222 9041
மின்அஞ்சல்: editorkavalan@gmail.com
இணையத்தள முகவரி: www.paathukavalan.com

# தும்பளை கலாநிதி தாவீது அடிகளாரின் விண்ணகப் பிறப்பின் 30 ஆண்டுகள் நிறைவின்....

அவரது மனித நேயப் பணி கத்தோலிக்கத்தின் ஆணி வேர் எனக் கூறலாம். இயேசு பிரானின் போதனைகளின் அடிப்படை மனித நேயமே. இயேசு பிரானின் போதனைகளின் கருவாக அமைந்தது "அன்பு" என்பதாகும்.

"இறைவன் மீதும் அயலவன் மீதும் அன்பு காட்டுவாயாக" என்பதையே மையப்பொருளாகக் கொண்டு இயேசு பிரான் போதித்தார், சாதித்தார். இதனை நன்றாக உள்ளத்தில் இருத்திய தாவீது அடிகள் அதனை சொல்லிலும் செயலிலும் காட்டினார். அடிகளார் தனது உற்றார் உறவினருக்கு மட்டும் மனித நேயத்தை மட்டுப்படுத்தவில்லை. எங்கெல்லாம் மனித அன்பு தேவைப்பட்டதோ அங்கெல்லாம் அவரால் செயலில் வெளிப்படுத்தப்படடது.

அடிகளாரை "நடமாடும் மனித நேயப்பண்பாளன்" என்று கூடச் சித்திரிக்கலாம். இயேசுபிரான் சிறுபிள்ளைகளை நன்றாக நேசித்தவர், அரவணைத்தவர். "சிறுபிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள்" என்று கூறிய யேசுபிரான் சிறுபிள்ளைகள் மீது காட்டிய பேரன்பு போன்று தாவீது அடிகளும் சிறுபிள்ளைகள் மீது அன்பு, பரிவு, இரக்கம் காட்டினார் என்பதற்குச் சான்றுகள் உள. கல்லூரிக்கு வெளியே தாவீது அடிகள் சிறுவர்கள் மீது அன்பும், அக்கறையும் காட்டிய சந்தர்ப்பங்கள் பல உள. அவர் மாலை நேரங்களில் உலாப் போகும் வழக்கம் உண்டு அவ்வேளைகளில் வழிகளில் காணும் சிறுவர்கள் மீது அவரது கண்ணோட்டம் செல்லும். ஒருகணம் தரித்து நின்று அவர்களுடன் உரையாடி அவர்களின் குடும்பப் பின்னணி, கல்வி நிலை முதலியவற்றை அறிந்து கொண்டதன் பின் அவர்களின் கல்வியினை ஊக்குவிப்பதிலும், அவர்களுக்குத் தேவையான புத்திமதிகளை வழங்குவதிலும் அவரின் கவனம் செலுததப்பட்டது. இவ்வாறு சந்திக்கும் சிறுபிள்ளைகளில் யார் யாருக்கு கல்வியைத் தொடர உதவிகள் தேவைப்படுமோ அதனை இனங்கண்டு கொண்டு செயற்படுவார். முக்கியமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளைக் கண்டறிந்து அப்பிள்ளைகள் கல்வியைத் தொடருவதற்கு அவர் தன்னாலான உதவிகளைச் செய்திருக்கின்றார் என்பதற்குச் சான்றுகள் உள. அவரினால் வழங்கப்படட பணத்தானம் பின்தங்கிய ஏழைப் பிள்ளைகள் சிலருக்கு பெரும் வரப்பிரசாதமாய் அமைந்தது என்பதற்குச் சான்றுகள் உள. இவ்வாறு அவரின் பண உதவியைப் பெற்று, கல்வியைத் தொடர்வதற்கு அவருடன் விடுமுறைக் காலங்களில் வாழ்ந்து வந்து, உயர் கல்வியைப் பெற்று உயர்நிலை அடைந்தவர்களில் இருவரை இங்கு குறிப்பிடலாம். அவரின் ஆதரவுடன் கல்வி கற்று வைத்திய கலாநிதியாகப் பட்டம்பெற்ற ஒருவரே யாழ். குருநகரைச் சேர்ந்த காலஞ் சென்ற டாக்டர் பிலிப்ஸ் தாவீது அடிகளின் உதவியுடன் உயர் கல்வியைக் கற்ற இன்னொருவர் நாரந்தனையைச் சேர்ந்த திரு. பசில் என்பவராவார். அவர் பொறியியலாளராகினார்.

இத்தகைய பரோபகாரியான தாவீது அடிகள் தன் உறவினருள் கல்வி கற்கக் கூடியவர்களுக்கு உதவிகள் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினார். அவரின் உதவிகளோடு அவரின் உறவினர் சிலர் உயர் கல்வியைப் பெற்று உன்னத நிலையை அடைந்தனர். இக் கட்டுரையாளனும் பல்கலைகழகத்திற்கு அனுமதி பெற்று இளங்கலைமாணிப் பட்டம் பெற வழிகாட்டியவரும் பண உதவி வழங்கியவரும் தாவீது அடிகளாரே என்பதை இங்கு குறிப்பிடலாம்.

**திரு. சீ. அந்தோனிமுத்து**
**முன்னாள் விரிவுரையாளர்.**

தாவீது அடிகளின் மதிநுட்பமும் பகுத்தாயும் திறனும் அவர் மேற்கொண்ட மொழிகளின் ஆய்வுகளின் மூலம் வெளிக் கொணரப்பட்டன. நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரின் உந்துதலால் கீழைத் தேச மொழிகளுள் மிகவும் பழமை வாய்ந்த சமஸ்கிருத மொழியைக் கற்று அதில் பாண்டித்தியம அடைந்து அதில் முதுகலை மாணீப்படத்தினை இலண்டன் பல்கலைகழகத்தில் பெற்றுக் கொண்டமை அவரது மொழி கற்கும் ஆற்றலைப் புலப்படுத்துகின்றது. அதனைத் தொடர்ந்து கீழைத் தேசத்தில் முக்கியமான வாழும் மொழிகளையும், மேலைத் தேசத்தில் முக்கிய வாழும் மொழிகளையும் கற்கத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து முக்கியமாக தமிழ் மொழியை மையமாக வைத்து மற்றைய மொழிகளோடு ஒப்பீட்டு ஆய்வு செய்து. சுவாமி ஞானப்பிரகாசர் ஆரம்பித்து வைத்த ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளைப் பின்பற்றி தானும் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளை 1970ம் ஆண்டு தொடக்கம் பல பாகங்களாக வெளியிட்டுள்ளார். அவற்றை விட தனி நூல்களையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. அவற்றுள் ஒன்று "We Stand For..." என்பதாகும். அந்நூலில அவர் கூறிய கருத்துக்கள் இக்கால இலங்கைக்கு மிகவும் பிரயோசனமுடையன. எம் நாட்டில் நிலவும் இன மொழிப் பிரச்சனைகளுக்கு அவை தீர்வாக அமையும் என்பதனை காணக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் 1950களில் சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கினதால் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். இதற்கு முன்னர் எம் நாட்டில் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் அரசகரும மொழியாகப் பயனபடுத்தப்பட்டது. எனவே, 1950களில் இலங்கையில் அமுலாக்கப்பட்ட அரசகரும மொழிக் கொள்கையினால் இலங்கை வாழ் மக்களிடையே இன, மொழிப் பூசலையும் கசப்புணர்வுகளையும் குரோதத்தையும் ஏற்படுத்தியது. இதனால் இனக்கலவரங்கள் ஏற்பட்டு, தொடர்ந்து உள் நாட்டுப் போரும் மூண்டது. இந்நிலைமையை அவதானித்த தாவீது அடிகள் மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வுகளின் அடிப்படையில் சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிகும் ஊற்று ஒன்றே

[சென்ற இதழ் தொடர்ச்சி]

அவை சகோதர மொழிகளே என்ற கருத்தையும் வெளியிட்டார். எனவே, இந்நாட்டில் வாழும் மக்கள் இன, மொழி அடிப்படையில் வேற்றுமை பாராட்டாது ஒற்றுமையாய் வாழ வேண்டும். என்ற சிந்தனையை முன்வைத்தார். தாவீது அடிகள் எழுதி வெளியிட்ட "We Stand For..." என்ற சிறிய நூலில் அவரது பெறுமதி மிக்க சிந்தனைகள் பொறிக்கப் படடன. அவற்றுள் ஒன்று மொழிக் கொள்கையோடு தொடர்புடையது. இலங்கையில் நிலவும் மொழிப்பிரச்சனைக்குத் தீர்வான மொழிக் கொள்கையாக அவர் கூறிய கருத்துப் பின்வருமாறு:

We Stand For A Novel Trilingualism

- **Mother Tongue**
- **English**
- **A Dead Language**

மேற்கூறிய கூற்றின் தமிழாக்கம் பின்வருமாறு:

"நாம் புதியதொரு மும்மொழிக் கொள்கைக்காகவே......"

- தாய்மொழி
- ஆங்கிலம்
- தொல்மொழிகளில் ஒன்று

மொழி என்பது மனிதருக்கிடையே ஒரு தொடர்பாடல் கருவியே. மனித சமுதாயத்தில ஒருவர் ஒருவரோடு உறவை ஏற்படுத்தும் கருவியே

**எமக்காக மொழியா? அல்லது மொழிக்காக நாமா?**

என்ற வினாக்களை எம்முள் எழுப்பி மொழிப் பிரச்சனைக்கு தீர்வுகாண சீராகச் சிந்திப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை. ஒவ்வொருவரும் தான் வாழும் சமூகச் சூழல், சந்தர்ப்பத்துக்கு ஏற்ப மொழியை அல்லது மொழிகளைக் கற்று கருத்துக்களை பரிமாற்றி வாழ்வதே பொருத்தமானது. பகுத்தறிவுள்ள மனிதன் எவனும் "நாம் வாழ்வதற்கு மொழி தேவை" என்பதை உணர்ந்து கொள்வான். மொழிக்காக நாம் வாழ்வதை ஏற்கான். எனவே பயன்பாட்டுவாத அடிப்படையில் நாம் மொழிவெறியற்ற சமூகத்தைக் கட்டி எழுப்பி அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ முயற்சிப்போமாக.

## பருத்தித்துறை பங்கில் அன்பிய வாரம்

இவ்வாரம் பருத்தித்துறை பங்கில் அன்பிய வாரம் அனுசரிக்கப்படுகின்றது. அன்பிய வார நிகழ்வுகளாக வருகின்ற புதன்கிழமை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும், வெள்ளிக்கிழமை நாவாந்துறைப் பங்கு அன்பியக் குழுவுடன் அனுபவப் பகிர்வும், சனிக்கிழமை மறைமாவட்ட அன்பிய குழுவினருடன் பங்கு அன்பியக் குழு கலந்துரையாடலும், கருத்தமர்வும் நடைபெற்று ஞாயிற்றுக்கிழமை காலையில் அன்பிய விழாத் திருப்பலியும், மாலையில் நற்கருணைப் பவனியும் நடைபெறும் என பங்குத் தந்தை கூறினார்.

பொதுசன நூலகம்



# மூன்றும் ஒன்றும்


அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்

"மூன்று என்றால் மூன்று ஒன்று என்றால் ஒன்று இது என்ன மூன்றும் ஒன்றும் இது முரண்பாடாக இல்லையா?" இவ்வாறு வினாவெழுப்பினார் ஒரு இஸ்லாமிய சகோதரர். "நாங்கள் தெளிவான ஒரு தெய்வக் கோட்பாடு உடையவர்கள் இந்துக்கள் பல தெய்வக் கோட்பாடு உடையவர்கள். இந்த நிலைகயைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் நீங்கள் தான் இரண்டையும் இணைத்து குழம்புகின்றீர்கள்" இவ்வாறு அவர் தொடர்ந்து தமது கருத்தை முன்வைத்தார்.

## மூன்று ஒன்றாகலாமா?

நிட்சயமாக முடியும். மூன்று மட்டுமல்ல எத்தனையும் இணைந்து ஒன்றாக முடியும். வாகனம் ஒன்றைத் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று பல்வேறு பகுதிகளைத் தனித்தனியாகச் செய்கிறது. பின்பு அவற்றை ஒருங்கிணைத்து ஒரு வாகனத்தை உருவாக்குகின்றது. இப்போது அது ஒரு வாகனம் தான். ஆனால் அதனுள்ளே உள்ள எத்தனையோ பகுதிகள் தத்தமது தனித்துவத்தோடு ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படும் போது வாகனம் இயங்குகின்றது. இங்கு பல பாகங்கள் ஒரு வாகனம் ஆகவில்லையா?

மனித நிலைக்கு வருவோம். ஒரு குடும்பம் கணவன், மனைவி, பிள்ளைகள் இவர்கள் ஒருவரின் தனித்துவத்தை மற்றவர் மதித்து ஏற்று அன்பு செய்யும் போது ஒரு குடும்பம் ஏற்படுகின்றது. அவர்களிடையே பரஸ்பர மதிப்பும் புரிந்துணர்வும் அதிகரிக்கின்றபோது அன்பும் பிணைப்பும் அதிகரிக்கிறது. இது அக்குடும்பத்தை ஒரு குடும்பமாக, ஐக்கியமான குடும்பமாக உருவாக்குகிறது. மாறாக அவர்களுள் புரிந்துணர்வின்மையும், முரண்பாடுகளும் வலுக்கும் போது அக்குடும்பம் மூன்றாக அல்லது அதற்கு மேலாக உடைந்து போகிறது. எனவே ஒத்திசைந்தியங்கும் ஒரு குடும்பம் திரித்துவ மறைபொருளின் ஒரு அருள் அடையாளமே.




இந்த வகையில் உயர்ந்த நோக்கத்தோடு தனியன்களின் தனித்துவத்தை மதித்து இணைந்து இயங்கும் எந்த ஒரு குழுமமும் மூவொரு இறைவனின வெளிப்பாடே எனக் கொள்வதில் தப்பேதுமில்லை. மேலும் அத்தகைய குழுமங்கள் ஒவ்வொன்றும் திரித்துவத்தின் புலன் காணும் அருள் அடையாளங்களே.

## குழுமமாய் இயங்கும் இறைவன்

இறைவன் தனியனாக இல்லை, மூன்று ஆட்களின் ஒரு உறவுக் குழுமமாக இருக்கின்றார் என்ற புரிதல் கிறிஸ்தவ இறைக்கோட்பாட்டின் ஒரு தனித்துவச் சிறப்பாகும். இறைநிலையில் உன்னதமான பிணைப்புப் பேணப்படுவதனாலே இறைவன் மூன்று ஆட்களாகவும் ஒரு இறைவனாகவும் இருப்பது சாத்தியமாகின்றது. ஒரு விதத்தில் எமது உறவு அனுபவத்தின் நீட்சியே இறை உறவு நிலை.மூவொரு இறைவனின் குழும நிலையைப் புரிந்து கொள்ளுகின்ற போது எமது குழுமவாழ்வுக்கான ஆழமான அடித்தளம் இடப்படுகின்றது.

## குழுமமாக வாழ அழைக்கும் இறைவன்

தான் ஒரு குழுமமாக இருக்கும் இறைவன், ஒரு மூடுண்ட குழுமமாக அல்ல மாறாக மனிதனையும் அதற்குள்ளே அழைக்கும் திறந்த குழுமமாக உள்ளார். மத்திய கால கீழைத்தேய ஓவியர் ஒருவர் இதனை அழகான ஒரு ஓவியத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு சதுர வடிவமான மேசை அதன் மூன்று புறத்திலும் தந்தை, மகன், தூய ஆவியார் ஆகிய மூவரும் அமர்ந்து விருந்துண்ணுகின்றனர். அதனது நாலாவது பக்கம் முன் பக்கம் வெறுமையாக இருக்கிறது. அது மனிதர்களுக்காக காத்திருக்கின்றது. அந்த இறை விருந்திலே மனிதனும் கலந்து கொண்டு இறை குழுமத்திலே இணைந்து கொள்ள வேண்டும் என்ற அழைப்பை இறைவன் விடுத்துக்கொண்டிருப்பதாக அந்த ஓவியன் சித்திரிக்கின்றான்.

## அன்பியங்கள் மூவொரு இறைவனின் அருள் அடையாளங்கள

ஏற்கனவே பார்த்தது போல எவ்வாறு ஒவ்வொரு இல்லத் திருச்சபையும் மூவொரு இறைவனின் உறவு வாழ்வுக்கு அருள் அடையாளங்களாக திகழ அழைக்கப்படுகின்றனவோ அது போல அயலில் வாழும் கிறிஸ்தவ குடும்பங்களும் ஒரு அன்பியமாக இணைந்து மூவொரு இறைவனின் அருட்சாதனமாக திகழ அழைப்புப் பெறுகின்றன. அன்பியங்கள் என்பன எமது விருப்பு வெறுப்புக்கு உட்பட்டவையல்ல அவை ஆழமாக திரித்துவ இறையியலிலே வேரூன்றி உள்ளன. குழுமமாக வாழும் இறைவன் தனது மக்களையும் குழுமமாக வாழவே அழைக்கின்றார் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் சான்று பகர்கின்றது. பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ரயேல் மக்களை ஒரு குழுமமாக அழைக்கின்றார். அவ்வாறே புதிய ஏற்பாட்டிலும் அவர் திருச்சபையை ஒரு குழுமமாக அழைக்கின்றார். ஆகவே அன்பியங்களின் வழியில் குழும வாழ்வை திருச்சபையில புதுப்பிப்பது என்பது மூவொரு இறைவனில் நாம் அறிக்கையிடும் நமது அடிப்படை விசுவாசத்தோடு தொடர்புபட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## எதிர்ச்சான்றுகள்

ஒரு கிறிஸ்தவ குழுமத்தில் (குடும்பம், அன்பியம், பங்கு, பக்திச்சபைகள்) காணப்படக் கூடிய அனைத்துப் பிரிவினைகளும், கட்சிமனப்பான்மைகளும், சண்டை சச்சரவுகளும், பகை, பழி முரண்பாடுகளும் அடிப்படையில் மூவொரு இறைவனுகது எதிர்ச்சான்றுகளாகும். ஒவ்வொரு ஆட்களின் தனித்துவத்தை மதிப்பதன் மூலம் உருவாகும் அன்புப் பிணைப்பிலே ஓரிறையாக திகழும் இறை பொருள் தனது படைப்பாகிய எம்மிடம் எதிர் பாத்து நிற்கும் உறவு நிலையை நாங்கள் வெளிப்படுத்தாத போது நாம அறிக்கையிடும் மூவொரு இறைவனைத் தான் அவமதிக்கின்றோம். எமது உறவு வாழ்வு எதிர்ச்சான்றாக அல்லாமல் நற்சான்றாக மாற வேண்டும்..

## மூவொரு இறைவனின் திருவிழாவில்..

மூவொரு இறைவனின் திருவிழாவை நாம் நினைவு கூர்ந்து மகிழும் போது சுயநல வேலிகளைக் கடந்து உறவுப் பாலங்களை அமைக்கக் கிடைக்கும் அழைப்பை புரிந்து கொள்வோம். நாம் கட்டியெழுப்பும் ஒவ்வொரு அன்புச் சமூகமும் அது குடும்பமாக இருந்தாலென்ன, அன்பியங்களாக இருந்தாலென்ன அல்லது வேறு குழுக்களாக இருந்தாலென்ன அவை வேற்றுமையில் ஒற்றுமை காண்பதன் மூலம் அதாவது தனித்துவங்களை மதித்து உறவைக் கட்டியெழுப்புவதன் மூலம் மூவொரு இறைவனுக்கே சான்று பகர்கின்றன என்பதை உணர்வோம். மூவொரு இறைவனின் பிரதிபலிப்பாக உறவுச் சமூகங்களைக் கட்டியெழுப்புவோம்.

# மானிடர்க்கு உண்மை வாழ்வைத் தரவல்லது இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமுமே!

அருட் சகோ. றமேஸ் அ.ம.தி

உலக வரலாற்றில் மனித வாழ்வை ஆழமாக ஆராய்கின்ற போது, இறைவனோடு, சமூகத்தோடு, குழுவோடு, தனி மனிதனோடு, இயற்கையோடு உள்ள உறவுகளை வளர்க்க வேண்டும் என்ற உணர்வு கொண்டவர்களை காணமுடிகிறது. இந்த உறவை வலுப்படுத்துவதற்காக சிலர் உள்ளதைக் கொடுப்பார்கள் சிலர் உள்ளதிலிருந்து கொடுப்பார்கள். மேலாக உலகம் வாழ்வு பெற தனது உடலையும் இரத்தத்தையும் முழுமையாக கொடுத்தவரின் தியாக அன்பே அனைததிலும் உயர்ந்தது. இதைத்தான் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் அன்பின் அடையாளமான நற்கருணை பிரதிபலிக்கிறது.

அப்பத்தின் வடிவத்திலும் இரசத்தின் வடிவத்திலும் ஆண்டவர் இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமும் அவர் ஆன்மாவும் தெய்வீகமும் அடங்கிய திருவருட்சாதனமே நற்கருணை எனப்படும். நம் மீட்பர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவிலே தமது இறுதி இராவுணவுப் பந்தியில் தம் உடல், இரத்தம் ஆகியவற்றாலான நற்கருணைப் பலியை ஏற்படுத்தினார். தாம் மீண்டும் வருமளவும் எல்லாக் காலங்களிலும் தமது சிலுவைப் பலியை நின்று நிலவச் செய்தார். தம் அன்பு மணமகளாம் திருச்சபையிடம் தமது இறப்பு உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் நினைவுச் சின்னத்தை விட்டுச் செல்லவும் இப்பலியை ஏற்படுத்தினார். நற்கருணை விருந்திலே கிறிஸ்து உணணபபடுகிறார். அதன் மூலம் நாம் அருளால் நிரப்பப்படுகிறோம் என்பதே கிறிஸ்தவ விசுவாசமாகும்.

இயேசு பாலனை தீவனத் தொட்டியில் கிடத்தி இவர்தான் உலகம் உய்வதற்கென இறைவன் தந்த உணவு என அடையாளம் காட்டினார் அன்னை மரியா. அன்னை மரியாவின் தூண்டுதலால் கானாவில் தண்ணீரை இரசமாக மாற்றினார் இயேசு *(யோவா 2: 1-11)*. இவ்வாறு தம் வல்லமையை முதன் முதலில் வெளிப்படுத்திய புதுமை நற்கருணையோடு தொடர்பு கொணடதே. அப்பம் பலுகுதல் நிகழ்ச்சி மக்கள் மீது இயேசு கொண்ட பரிவை வெளிப்படுத்துகிறது *(மாற் 6:34)*. பாடுகளை ஏற்பதற்கு முன்னதாகத் தம் சீடர்களோடு குடும்பமாகப் பாஸ்கா விழாவில் உறவுப் பின்னணியில் அப்பத்தையும் இரசத்தையும் தமது உடலாகவும் இரத்தமாகவும் மாற்றுகிறார். கையளிக்கும் உடலாக *(லூக் 22:19)*, சிந்தப்படும் இரத்தமாக *(மாற் 14:24)* தம்மை அர்ப்பணிக்கிறார். அருட்சாதனமாக மாற்றுகிறார். தொடர்ந்து கொண்டாடும்படி கட்டளையிடுகிறார். உயிர்த்த பிறகு நற்கருணைப் பகிர்வின் மூலமாக எம்மாவு சீடர்களுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார் *(லூக் 24:30-31)*.



இவ்வாறு நற்கருணை பற்றிய சிந்தனை இயேசுவின் வாழ்வில் திடீரென உதயமான தொன்று அன்று. அவரது பிறப்பிலிருந்து விண்ணேற்றம் வரை பல்வேறு கட்டங்களில் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்கப்பட்டது. பெத்தலேகேமில் அடையாளம் காட்டப்பட்டு, கானாவில் அறிமுகப்படுத்தப்பட்டு, கப்பர்நகூமில் பிரகடனப்படுத்தப்பட்டு, ஜெருசலேமில் நிறைவேற்றப்படட்டு, எம்மாவுவில் கொண்டாடப்பட்டது.

இறைமகன் இயேசு மனுக்குலத்திற்காக தம்மையே வெறுமையாக்கியதும் காலத்தையும் நேரத்தையும் கடந்தவர் காலத்திற்குட்பட்டு இஞ்ஞாலத்தில் பிறந்ததும் படைப்பவர் தன்னால் படைக்கப்பட்ட பெண்ணிடம் உருவாக்கப்பட்டதும் மனிதரைப் பராமரிப்பவர் மனிதரின் பராமரிப்பில் வளர்ந்தும் மனிதரை வழிநடத்துபவர் மனிதரிடம் தன்னைக் கையளித்ததும் எதற்காக? மானிடர்களாகிய எம் மேல் அவர் கொண்ட அளவில்லா அன்பிற்காக, பாவத்தின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் எங்களை மீட்டு வாழ்வு தருவதற்காக, இன்னும் இனறு சிநதிக்கின்ற பொழுது அடிமைப்படுத்தப்பட்டு துன்புறுத்தப்படும் எமக்கு உண்மை வாழ்வளிப்பதற்காகவுமே அவர் இவ்வாறு திட்டம் வகுத்தார்.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒருவகையில் தனக்கு விடுதலை வேண்டி அதற்காக உழைப்பதை நாம் காண முடிகிறது. இந்தவகையில் மானிடர்க்கு உண்மை விடுதலை வாழ்வை அளிக்க வல்லது நற்கருணையே. இன்றைய வாழ்க்கைச் சூழலில் மக்கள் உணவிற்காக அலைந்து பரதவிக்கும் வேளையில், மனித குலத்தின் மூன்றில் ஒரு பங்கு மனிதர்கள் பசியுடன் படுக்கைக்குச் செல்லும் வேதனையான காலத்தில், இறைவன் தம்மையே உணவாக வழங்கும் நிகழ்வு உண்மையிலேயே அவர்களுக்கு விடுதலை வாழ்வை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. அன்று துன்பத்தின் சுமைகளில் கலங்கிய மனிதர்களுக்கு விடுதலை வாழ்வைக் காட்டிய அதே இறைவன் இன்று துன்புறும் எம் மக்களுக்கு உண்மை விடுதலை வாழ்வளிக்க நற்கருணை வடிவில் பிரசன்னமாயிருக்கிறார் என்ற நம்பிக்கையில் அவரிடம் செல்வோம்.

# அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு



19 - 06 - 2011





அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தமது குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற இவ்வேளையில் ஆன்மீகத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் அவரின் பணிகள் பல ஆண்டுகள் தொடர மனமார வாழ்த்துகின்றோம்.

திருமதி. B. இரட்ணராஜா குடும்பத்தினர் (லண்டன் கனடா)

Advt-45/11



# வாழ்த்துகிறோம் வாழ்க வாழ்கவென.. அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை



பணிக்குருத்துவத்தில் வெள்ளிவிழாக்காணும் எம்முன்னைநாள் புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரும் பாதுகாவலன் ஆசிரியருமான அருட்பணி. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருக்கு எம் இனிய இதயம் நிறைந்த வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளர், பாதுகாவலன் ஆசிரியர்,
பணியாளர்கள்,
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## “உயிரூற்று” - நூல் வெளியீடு

அருட்பணியாளர் மா. றேஜிஸ் இராசநாயகம் எழுதிய, ஞாயிறு மறையுரைச் சிந்தனைகள் அடங்கிய “உயிரூற்று” என்னும் நூல்கள் மூன்று பகுதிகளாக வெளிவந்துள்ளன. (மூன்று வழிபாட்டு ஆண்டுகளுக்கானவை).

சூழலின் இயங்கு நிலைகளைத் தொட்டு இறை வார்த்தைகளை ஆய்ந்திருக்கும் இந்நூல் தொகுப்பு அருட்தந்தையர்கள், மறையாசிரியர்கள், வழிபாட்டுக் குழுவினர், பொது நிலையினர் போன்றோருக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும்.

மூன்று நூல்களும் அடங்கிய ஒரு தொகுதியின் விலை ரூபா 400/= மட்டுமே, எனவும் இவ் நூல்கள் திருவழிபாட்டு நிலையத்திலும், புனித மடுத்தீனார் குரு மடத்திலும் வாங்க முடியும் என நூலாசிரியர் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

# தமது சொந்த இடத்தில் நின்ற ஓர் அனுபவம்

கிளாலி பங்கு மக்கள்



கிளாலி புனித தோமையார் ஆலயம் முற்றாக சேதமடைந்துள்ளதாலும், மக்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படாத காரணத்தாலும், இத்திருவிழா கெற்பேலி திருக்குடும்ப ஆலயத்தில் கொண்டாடப்பட்டது.

பங்குனி 31ம் திகதி மாலை திருப்பலியும், நற்கருணை விழாவும், மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச்சுருப பவனியும்,ஆசீர்வாதமும் இடம் பெற்றது. தூய தோமையார் ஆலயத்தை சேர்ந்த மக்கள் கெற்பேலி, சாவகச்சேரி, மற்றும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் வருகை தந்து ஆலயத்தில் தங்கி நின்று விழாவை சிறப்பித்தார்கள். மிக நீண்ட ஆண்டுகளுக்கு பிற்பாடு இப்பங்கு மக்கள் தமது சொந்த இடத்தில் நின்று திருவிழா கொண்டாடிய ஒரு அனுபவம் என்றும் விரைவில் தமது இடம் செல்ல வேண்டுமென்றும் தங்கள் உணர்வை வெளிப்படுத்தினார்கள். திருவிழா இருநாள் வழிபாடுகளையும் விஸ்ஷ்மன் அடிகளார் நெறிப்படுத்தி சிறப்பித்தர். திருவிழா ஒழுங்குகளை பங்குத்தந்தை பத்திநாதன் அடிகள் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

# இலங்கையில் சிறுவர் தொழிலாளர்கள்



இலங்கைச் சிறார்களில் 18 வீதத்தினர் குழந்தைத் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படுவதாக இது குறித்து ஆராய்ந்த வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

உலகளவில் ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 12ம் தேதி குழந்தைத் தொழிலை ஒழிக்கும் உலக நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நாளை முன்னிட்டு, இலங்கை நிலைமைகள் குறித்து கருத்து வெளியிட்ட கண்டி பேராதனை பல்கலைக்கழகத்தின் முதன்மை விரிவுரையாளரான எஸ். விஜயச்சந்திரன் அவர்கள், இலங்கையில், குறிப்பாக மலையகப் பகுதியில் பெருந்தோட்டங்களில் 29.1 வீதம் சிறார்கள் தொழிலாளர்களாக இருப்பதாகக் கூறினார்.

இலங்கை அரசு சிறார் தொழிலாளர் முறைமையை ஒழிப்பதற்கான பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்ற போதிலும், அவை சக்தியற்று இருப்பதாக விஜயச்சந்திரன் கூறினார். இலங்கையில் சுமார் 30000 சிறார்கள் சுற்றுலாத் துறையில் பாலியல் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இருபபினும் ஒப்பீட்டளவில் அண்டை நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வங்க தேசத்தை விட இலங்கையில் சிறார் தொழிலாளர்கள் குறைவாகவே இருப்பதாகவும் அவர் கூறினார். இலங்கையில் காணப்படும் கட்டாயக் கல்வி முறைமை, மற்றும் அதிக பெற்றோர்கள் கல்வியறிவு பெற்றிருத்தல் ஆகியவை இதற்கான காரணங்களாக இருக்கலாம் என்றும் அவர் . கூறினார்.

# நாம் செல்லும் பாதை...

மிக மிக வேகமாக முன்னேறி வருகின்ற நவீன உலகில் நாம் எங்கே செல்கிறோம். எதைச் செய்கிறோம் நமது வாழ்க்கை முறை சரியானதா? தவறானதா? என்கின்ற சிந்தனையின்றி எமக்கென்று ஒரு நோக்கமோ, இலக்கோ இன்றி மனம் போன போக்கில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு கண்மூடித்தனமாக நாம் வாழும் போது நிச்சயமாக எமது நோக்கத்தை நிறைவேற்றவும் முடியாது இலக்கை அடையவும் முடியாது. வாழ்க்கையை தொலைததவர்களாக விரக்தியோடு நடை பிணங்களாகவே இருப்போம்.

இந்த உலகத்தில் படிப்படியாக முன்னேற வேண்டும் என யாருமே நினைப்பது கிடையாது. மாறாக ஒரே நாளில் உச்சநிலையை அடைந்து விட வேண்டும் என்று தான் பலரும் நினைக்கிறார்கள். ஆனால் நாம் படிப்படியாக முன்னேறும் போது தான் நமக்கு வாழ்க்கையின் யதார்த்த நிலைகள் புரியும். அதாவது வாழ்வின் வேதனைகள், சோதனைகள், கஷ்டங்கள், இழப்புக்கள் இவையெல்லாவற்றையும் தாண்டி எவ்வாறு வாழுவது என்றும் உலகியல் போக்குகளின் மத்தியில் ஆன்மீகத்தை எவ்வாறு காத்துக் கொள்வது என்றும் நாம் நுட்பமாக விளங்கிக் கொள்ள முடியும். அப்போது தான் நமது மனம் சோர்ந்து விடாமல் உறுதியோடு இருக்கும்.

அன்னை மரியாளை எடுத்துக் கொண்டால் கிறிஸ்துவை கருவறையில் தாங்கியது முதல் கல்லறையில் அடக்கம் செய்தது வரை மனம் தளராது அனைத்தையும் ஏற்று இறைதிட்டத்திற்கு தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தாள். இதனால் கிறிஸ்துவிற்கு மட்டுமன்றி



றுபினா ஷிறோமி
புனித யாகப்பர் ஆலயம்,
இளவாலை.

மனுக்குலம் முழுவதற்கும் தாயாக போற்றப்பட்டாள். அத்தோடு மரியன்னை இறைதிட்டத்தை நிறைவேற்றுவதையும் தனது மகன் கிறிஸ்து தந்தையின் திருவுளத்திற்கு ஏற்ப மனுக்குலத்திற்கு மீட்பை பெற்றுக் கொடுக்கும் வரை கிறிஸ்துவோடு சேர்ந்து உறுதியோடு பயணிப்பதையும் நோக்காகக் கொண்டு வாழ்ந்து காட்டினாள். இவ்வாறு நமது வாழ்க்கையில் அன்னை மரியாள் சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றாள். நாமும் வாழ்க்கையில் சந்திக்கின்ற சவால்களை, சோதனைகளை கண்டு மனம் துவண்டு போகாமல் அவற்றை சாதனைகளாக மாற்ற முயற்சி எடுக்க வேண்டும்.

மனித சமூக முன்னேற்றத்திற்கு என கண்டறியப்பட்ட சமூக தொடர்புசாதனங்களான; பத்திரிகை, சினிமா, வானொலி, தொலைக்காட்டி, தொலைபேசி, இணையம் என்பன இன்று மக்களின் உடல் உள ஆன்மீக நலன்களுக்கு பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துவதாக மாறி வருகின்றன. மனிதனின் சிற்றின்பத்தை கிளறி விட்டு கண்ணுக்கு விருந்தளிப்பனவாகவும் இளைய சமுதாயத்தை பாழாக்குவதாகவும் அமைந்து விட்டன. இதனால் இளைய தலைமுறையினரின் எதிர்கால இலட்சியம், நோக்கு என்பன சிதறடிக்கப்பட்டு திசை திரும்புகின்றன. இத்தகைய நிலையானது சமூக விரோத குற்றச் செயல்கள் தலைதூக்க காரணமாக அமைகிறது. எனவே வன்முறை அற்ற சமூகத்தை கட்டியெழுப்புவது நமது பாரிய பொறுப்பாகும்.

பொதுவாக எம் எல்லோருக்கும் ஓர் இலக்கு உண்டு. இலககு இன்றி ஒருவன் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லவோ, முன்னேறிச் செல்லவோ முடியாது. நாம் கொண்டிருக்கும் இலக்கு ஆரோக்கியமானதாக இருக்கின்ற இடத்து நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவ் இலக்கை நோக்கியதாக இருக்கும். அது நமக்கும் பிறருக்கும் நன்மையையே விளைவிப்பதாக அமையும். இவ்வுலகில் நன்மையும் தீமையும் கலந்து நிறைந்து இருக்கிறது. நாம் தான் அவற்றை தேர்ந்து தெளிய வேண்டும். நன்மையைப் பற்றியவர்களாக தீமையை விட்டகல வேண்டும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து செயற்பட்டால் நிச்சயமாக நாம் செல்லும் பாதை சமூக நோக்கும் பிறர்நலமும் கொண்ட ஆக்கபூர்வமான ஆன்மீக பாதையாகவும் அமையும்.

## கோஹிமா மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் நியமனம்

கடந்த 16ம் திகதி ஷில்லாங் ‘ஓரியன்ஸ் இறையியல் கல்லூரி’யின் முதல்வராய் இருக்கும் அருள்தந்தை ஜேம்ஸ் தோப்பிலை இந்தியாவின் கோஹிமா மறைமாவட்டத்தின் புதிய ஆயராக இவ் வியாழன்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் நியமித்தார்.

ஜேம்ஸ் தோப்பில, 1959ம் ஆண்டு கேரளாவின் கோட்டயத்தில் பிறந்தார். இவர் உரோம் நகரின் உர்பான் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் இறையியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

# "அநீதியை கண்டித்து சமூக நீதியை நிலை நாட்டிய புனித அந்தோனியார்"

## பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய திருப்பலியில் அருட்பணி அன்ரனிதாஸ்



பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா பங்குத் தந்தை அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் கடந்த 13.06.2011 திங்கள் இடம் பெற்றது. அங்கு திருநாள் திருப்பலியை தலைமை ஏற்று ஒப்புக் கொடுத்த யாழ் மறை மாவட்ட நிதி முகாமையாளர் அருட்பணி ஜே.பி.அன்ரனிதாஸ் அடிகள் தனது மறையுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது மறையுரையில் இன்று மக்கள் எல்லோரும் புனித அந்தோனியாரை கோடி அற்புதர் என்றும், புதுமைகள் பல செய்பவர் என்றும் கேட்கும் வரம் தருபவர் என்றும் கூறும் நிலையில், நான் அவரை தன் அன்பு போதனையால் பாவிகளை மனம் மாற்றி புது வாழ்வுக்கு அழைத்து வந்தவர் என்றும், சமூக அநீதிகளை அஞ்சா நெஞ்சுடன் சுட்டிக் காட்டி நீதியை நிலைநாட்டிய ஒரு நல்ல மனிதன், கிறிஸ்தவன் என்ற நிலையில் நோக்குகிறேன் என எடுத்துக்கூறினார்.

தொடர்ந்து "என் வார்த்தை நெருப்பைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டி போலும் இருக்கிறதல்லவா என்கிறார் ஆண்டவர்" எனக் கூறும் இறைவாக்கினர் எரேமியாவின் வார்த்தைகள் புனித அந்தோனியாரின் வாழ்வின் ஆரம்பமுதல் இறுதி மட்டும் இழையோடிக்கொண்டிருந்தது. இதன் காரணமாக அவர் கரம் ஏந்திப் போதித்த இறை வார்த்தையின் வல்லமையால் இலட்சக்கணக்கான பாவிகளை மனம் மாற்றினார், அவர்களை கிறிஸ்துவிடம் அழைத்து வந்தார். இதன்போது ஏற்பட்ட மனமாற்றங்களும் உருமாற்றங்களுமே புதுமைகளாகவும் அற்புதங்களாகவும் மக்களால் இனம் காணப்பட்டது.

மேலும் தனது மறையுரையின் இறுதியில் சமூகப் பணிகள் பற்றிக் கூறும்போது நாம் வாழும் இந்நாட்களில் காண்பதுபோல் பொருட்பண்டங்களை கொடுத்து இல்லங்களைக் கட்டிக்கொடுத்து சமூகப்பணி செய்யாமல், சமூக அநீதிகளை சுட்டிக்காட்டி நீதி நிலைபெற செய்தததுதான் புனித அந்தோனியாரின் சமூகப்பணி என எடுத்துக் கூறினார். ஒரு முறை புனித அந் தோனியாரின் தந்தை மாட்டீன் பிரபுவின்மீது ஒரு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு நீதி மன்றத்தில் கைதியாக நின்றார். அநீதியான தீர்ப்பை ஏற்றுக் கொள்ளமுடியாத அவரின் தந்தை "அந்தோனி! மகனே அந்தோனி" எனக் கூவி அழைத்த போது எங்கோ ஒரு போதகப் பணியில் இருந்த புனித அநதோனியார் உடனே நீதி மன்றத்தில் தோன்றி இறந்தவனை உயிர்பித்து அவன் வாயால் உண்மையை வரவழைத்து தன் தந்தை மாட்டீன் பிரபு நிரபராதி என்பதை சபை முன்பாக நிருபித்தார். அப்போது நீதிபதி புனித அந்தோனியாரைப் பார்த்து "அப்படியானால் உண்மையான குற்றவாளியை காட்டித்தாரும்" எனக் கேட்டபோது புனித அந்தோனியார் சொன்னார் "நான் குற்றவாளியைக் காட்டிக் கொடுக்க நான் இங்கு வரவில்லை மாறாக குற்றமற்றவரை விடுவிக்கவே வந்தேன்" எனக்கூறி சமூக நீதியை தயங்காது நிலைநாட்டி அங்கிருந்து மீண்டும் மறைபோதக இடத்துக்குச் சென்றார் என்று கூறினார்.

இத் திருவிழாப் பலியில் அருட்பணி நேசநாயகம் அடிகளும் இணைந்து ஒப்புக் கொடுத்தார். ஈற்றில் திருச்சுருப பவனியுடனும் திருச்சுருப ஆசிருடனும் விழா இனிதே நிறைவுற்றது.

# கோப்பாய் தெற்கு தூய மரியாள் ஆலயப் பெருவிழா

தென் கோப்பாய் தூய மரியாள் ஆலய திருவிழா கடந்த மாதம் கொண்டாடப்பட்டது. திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள், 22-05-2011 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

திருவிழாவிற்கு முதல் நாள் (30-05-2011) மாலை திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் இடம் பெற்றது. அன்றைய தின வழிபாட்டை அருட்தந்தை டேமியன் அ.ம.தி அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். இவர் தமது உருக்கமான மறையுரையால் மக்களின் மனங்களை நற்கருணைப் பிரசன்னத்தோடு ஒன்றிக்கச் செய்தார். மறுநாள் காலை 7.00 மணிக்கு யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர். அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையிலே பெருவிழாக் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திரு விழாவிற்குக் கணிசமான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். அயற் பங்குகளிலிருந்தும் பக்தர்கள் ஒன்று கூடியிருந்தனர்.

குருமுதல்வர் தமது மறையுரையிலே எமது சமூக வாழ்க்கைக் கூறுகளின் பல பக்கங்களைப் படம் பிடித்துக் காட்டி நாம் அவற்றில் பிரமாணிக்கமாக இருககின்ற சம்பவங்களையும் பிரமாணிக்கமாக இருக்கத் தவறுகின்ற தருணங்களையும் துல்லியமாக எடுத்து விளக்கினார். இறுதியாக மரியன்னையின் திருச்சொரூபப் பவனியைத் தொடர்ந்து திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் அன்னையின் திருவிழா நிறை வெய்தியது.

இவ்விழாவானது நேர்த்தியான முறையில் நடந்தேறுவதற்கு ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி F.L.N குருஸ் அ.ம.தி அவர்கள் மேற்கொண்ட காத்திரமான முனனேற்பாடுகளும், அவற்றிற்கான பங்கு மக்களின் இதய பூர்வமான ஒத்துழைப்புக்களுமே காரணம் எனக்கூறின் அது மிகையல்ல.

**வெ. வொலன்ரைன் மொறிஸ்**
**புனித வளனார் குருமடம்**
**கொழும்புத்துறை.**

# யதார்த்த வாத அரங்கு - 05
# தாதியத்தின் எழுச்சி

**ஆக்கம்: ஜெகன் (யாழ் பல்கலைக்கழகம்)**





வைகாசி மாதம் 12ம் திகதி உலக தாதியர் தினம். உயர்ந்த சேவைகளில் ஒன்றான தாதியத்தின் எழுச்சி பற்றி நோக்குவது சாலப் பொருத்தமானதாகும்.

புனிதவதிக்கு ஐந்து ஆண் பிள்ளைகள். புனிதவதியின் கணவன் வெளிநாட்டில் இருந்தார். இதனால் தனது ஐந்து பிள்ளைகளையும் வெளிநாட்டிற்கு எடுத்துவிட்டார். இந்நிலையில் புனிதவதி தனிமையில் வீட்டில் இருந்தாள்.

ஒரு நாள் திடீரென அவளுக்குச் காய்ச்சல் வந்தது. தன்னைப் பராமரிக்க யாரும் இல்லை என்பதால் அவள் வைத்தியாசலைக்குப் போகத் தயங்கினாள். இருந்தும் அவளுடைய உடல் நாளுக்கு நாள் மோசமடைந்ததினால் அயலவர்கள் அவளை வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்றனர். வைத்திய அதிகாரிகளோ அவளின் உடலை பரிசோதித்த பின்பு புனிதவதியை வைத்தியசாலையிலேயே மறித்து விட்டனர்.

இந்நிலையில் புனிதவதி "ஐயோ ஆண்டவரே என்னைக் கவனிக்க பிள்ளைகளும் இல்லை எனக்கு யார் உதவி செய்ய வரப்போயினம்" என்று மனம்நொந்து அழுத போது... "அம்மா எப்படியிருக்கிறீர்கள்? வருத்தம் எல்லாம் எப்படியிருக்குது? அம்மா மருந்து எல்லாம் போட்டீங்களா?" என்று புனிதவதியை பராமரிக்க வந்த தாதியப் பெண் கேட்டார். புனிதவதியோ அம்மா நான் தனியாள் என்னால என்ன செய்ய முடியும் என்றாள் புனிதவதி. தாதியப் பெண்ணோ அம்மா உங்களைப் பராமரிக்கத்தானே நாங்கள் இருக்கிறோம். நீங்கள் ஒன்றுக்குமே பயப்பிடத்தேவையில்லை என்று, அத்தாதி புனிதவதியின் வருத்தம் மாறும் மட்டும் நன்றாகக் கவனித்து புனிதவதியின் வருத்தத்தை மாற்றி வீட்டிற்கு அனுப்பி விட்டார்.

புனிதவதியோ "அம்மா நன்றி அம்மா, உங்கள் பணி சிறக்க நீங்கள் வாழ்க" என்று கூறினாள் புனிதவதி. இப்படியான தாதியர் பணியினைக் கண்ட அவளின் கண்கள் கண்ணீரைச் சொரிந்து நின்றது. அக் கண்ணீர் நன்றியினை குறியீடாகச் சுட்டி நின்றது.

தாதியம் என்றால் தமிழில் தொண்டு என்று பொருள் படும். பண்டைய் காலத்தில் மக்கள் இறைவனுக்கு பல தொண்டுகள் பல செய்தனர். இதனால் தொண்டு செய்தவர்களை "இறைவனின் தொண்டர்கள்" என்றும் சிறப்புப் பெயரால் அழைக்கலாயிற்று.

காலங்கள் கடந்து செல்ல உலகப் போர்களும் ஆக்கிரமிக்கத் தொடங்கின. இருபதாம் நூற்றாண்டின் முன் பகுதியில் உலக யுத்தம் என வர்ணிக்கப்படும் இரண்டு யுத்தங்கள் நடைபெற்றன. இதில் முதலாம் உலக யுத்தமானது 1914 ஜுலை மாதம் 28ம் திகதி முதல் 1918 நவம்பர் மாதம் 11ஆம் திகதி வரை நாலாண்டுகளுக்கு மேலாக நடைபெற்றது. யுத்தத்திற்கான காரணம் ஐரோப்பாவில் உருவான போதிலும் அக் காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகள் அடிமைப்படுத்தியிருந்த உலக நாடுகளிலெல்லாம் யுத்தம் பரவியது. அடுத்து ஐக்கிய அமெரிக்காவும் இந்த யுத்தத்தில் பங்குபற்றியது. இறுதியில் உலகின் எல்லாக் கண்டங்களிலும் யுத்தம் பரவியதால் இது உலக மகா யுத்தம் எனப்பட்டது. இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற போர்கள் அந்தந்த நாடுகளின் எல்லைகளுக்குள்ளேயே நடைபெற்றன. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட இந்தப் போர் உலகம் முழுவதும் நடைபெற்றதால் உலக மகாயுத்தம் என வர்ணிக்கப்படுகின்றது.

இந்த யுத்தத்தில் போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியானதோடு, குற்றுயிராக்கப்பட்டும் காயப்பட்டும், நோய் வாய்ப்பட்டும் இருந்தார்கள். இந்நிலையில் இம் மக்களுக்கு தாதியம் என்ற சேவை அன்று தேவைப்பட்டது. இதனை உணர்ந்த புளோரன்ஸ் நைற்றீங்கேள் மக்களைக் காப்பாற்றும் பொருட்டு இம் மக்களுக்கு உதவ தாதியரிற்கு அனுமதியுங்கள் என்று அரசாங்கத்திடம் வேண்டினாள். அரசாங்கமும் இவருடைய வேண்டுதலுக்கு அனுமதி அளித்ததனால் அவ்விடத்தில் தாதியப் பணி சிறப்புற நடந்தேறியது. இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் காப்பாற்றப்பட்டார்கள். இதனால் உலகெங்கும் தாதியர் ஊழியம் பரவத் தொடங்கியது.

**இன, மத, மொழி, தேசங்களைக் கடந்து ஒரேயொரு குறிக்கோளை மட்டும் மையமாகக் கொண்டு செயற்படுபவர்களே தாதியர்கள்.**

சுகாதாரத்துறையில் தாதியர்களின் பங்கு இன்றைய நிலையில் அளப்பரிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஒரு நோயாளியானவர் அந்நோய் நிலையிலிருந்து குணமடைய வைத்தியருடன் இணைந்து செயற்படும் தாதியர்கள் அந்நோயாளியின் சுய தேவைகளுக்கு உதவுவது மட்டுமன்றி மருந்துகள் வழங்குவது முதல் அவரது உளநிலையை அறிந்து ஆறுதல் வழங்கி உறவினர்களையும் நோய் நிலை தொடர்பாக தெளிவுபடுத்தி ஆற்றுப்படுத்தி நிம்மதிப் படுத்துகின்றனர்.

நோயாளியானவர் எவ்வாறான சந்தர்ப்பத்திலும் ஒரு சமூக அந்தஸ்துடைய தனிமனிதராகவே தாதியர்களால் கருதப்படுகிறார். எவ்வாறான நெருக்கடியான நிலைகளிலும் (இரவு, அதிக நோயாளிகள், அவசர நிலை) நோயாளியின் உடல் நிலை, தொற்றுக்கள் தொடர்பாக நுண்ணிய கவனங்களுடனேயே தாதியர்கள் செயற்படுகின்றனர்.

நோயாளர்களை மையமாகக் கொண்டியங்கும் சுகாதாரக் குழுவில் தாதியர்களே, நோயாளர்களுடன் சிகிச்சை ரீதியான மிக நெருங்கிய உறவு முறையை பேணுகின்றவர்களாவர்.

# "புரியாதவற்றை புரியவைக்க ஆவியானவரின் வரங்கள் தொடர்ந்தும் எமக்குத் தேவை....."

**- அருட்பணி ஜோசப் செல்வன் செ.தா. -**

**"நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன் உங்கள் புதல்வர் புதல்வியரும் இறைவாக்குரைப்பர்" (யோவேல் 2:28)**

உலக கிறிஸ்தவர்கள் எல்லோரும் இன்று தூய ஆவியானவரின் வருகையினை அக்களிப்போடும், நிறை மகிழ்வோடும் கொண்டாடுகின்றனர். கிறிஸ்தவ விசுவாசப்படி தூய ஆவியானவர் எனவே இன் நன்நாளில் தூய ஆவியாருடைய கொடைகள் கனிகளைப் பற்றிச் சிந்திப்பது சாலப் பொருந்தும். இயேசு விண்ணேறிச் செல்லும் முன்பாக "நான் உங்களுக்கு ஒரு துணையாளரை அனுப்புவேன்" என்று திருவாய் மொழிந்தார். அதற்கிணங்க... அவர் அர்ச்சிக்கும் ஆவியை, ஆற்றலின் ஆவியை, அக்கினியின் ஆவியை, ஆளுமையின் ஆவியை, ஞானத்தின் ஆவியை, புத்தியின் ஆவியை, அறிவின் ஆவியை, விமரிசையின் ஆவியை, திடத்தின் ஆவியை, பக்தியின் ஆவியை, தேவபயத்தின் ஆவியானவரை அக்கினி நாவைப்போன்று அப்போஸ்தலர்களின் மேல் அனுப்புகின்றார். அக்கினி, தீ, நெருப்பு எல்லாமே சுட்டெரிக்கும் தீச்சுவாலையையே குறித்து நிற்கும். இயற்கையிலேயே நெருப்புக்கு மாபெரும் சக்தி இருப்பதனைக் காணலாம். நெருப்பு, வெப்பம் என்பவற்றின் பயன்பாடு இல்லாமல் நாம் பாவனைப் பொருட்களையோ, உணவையோ, வாகனங்களின் உற்பத்தியையோ, விஞ்ஞான ஆய்வுகளையோ, விண்வெளிப்பயணங்களையோ, ஆராய்ச்சிகளையோ நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இன்னும் குறிப்பாக சொல்லப் போனால் அக்னி நெருப்பானது தன்னிடம் வந்து சேருபவற்றையோ அல்லது தனக்குள் போடப்படுபவற்றையோ இன்னுமொரு நெருப்புப் பிளம்பாக மாற்றும் சக்தி கொண்டது.

இந்த நெருப்புப் பிளம்பாக மாறும் நிகழ்வுதான் தூய ஆவியானவரின் வருகையின் போதும் நிகழ்கின்றது. இயேசு ஆண்டவருடைய விண்ணேற்பின் பின்னர் எது நடக்குமோ என்று தெரியாமல், புரியாமல் மனம் கலங்கியவர்களாக திரும்பும் திசை எங்கிலும் பயமும் பதட்டமும் நிறைந்து நின்றதனை கண்ணுற்று தாமும் இயேசுவைப் போன்று கொல்லப்படுவோமோ என்று பயந்து கலங்கி மரியன்னையோடு செபத்தில் நிலைத்திருக்கும் போது ஆவியானவர் அக்கினிப் பிளம்பாக அவர்கள் மேல் வந்து இறங்குவதனைக் காண்கின்றோம் அந்த நிகழ்வைத்தான் இன்று கொண்டாடுகின்றோம். "நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள்." *(தி.பணி. 2:3)* இந்த நிகழ்வின் பின்னர் அப்போஸ்தலர்பணி நூல் முழுவதிலும் நாம் காண்பது என்னவென்றால் தூய ஆவியானவரின் சுட்டெரிக்கும் நிகழ்ச்சிகள்தான்.

மீனவர்கள் எனப்பட்டவர்கள் மீட்சி பெற்றவரானார்கள், பாவிகள் எனப்பட்டவர்கள் பரிசுத்தர்களானார்கள், பயந்து இருந்தவர்கள் வீரம் கொண்ட போர்வீரரைப்போன்று இறைவனின் வார்த்தை வாள் கொண்டு போராடத் தொடங்கினர். இறையரசுக்கு எதிராக இருந்த யார் யாருக்கெல்லாம் பயந்திருந்தார்களோ, ஓடி ஒளிந்து இருந்தார்களோ, அவர்களினது வீட்டு வாசலில் நின்று அவர்களின் கதவைத் தட்டி "வாழ்வளிக்கும் செம்மறியை நீங்கள்தான் கொன்றீர்கள்" என இடித்துரைத்தார்கள்.

புரியாதவை புரிந்தன, சந்தேகங்கள் தீர்ந்து சாட்சியம் பிறந்தது, சலனங்கள் அழிந்து சாதனைகள் மிகுந்தன, பயங்கள் மறைந்து புதுப்பாதைகள் திறந்தன, வேதசாட்சிகளின் ரத்தம் ஆறாக ஓடியும் வேதனைகள் தரும் மரணங்கள் நிறைந்தபோதும் வேதம் தளைத்தோங்கியது. வேத சாட்சிகளின் இரத்தம் வேதத்தின் விதையாய் விழுந்து விருட்சங்களைப் பிறப்பித்து வேதம் உலகம் எங்கும் பரவ வழிபிறந்தது. ஆவியானவர் அவர்களோடு தொடர்ந்தும் செயலாற்றி அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். எனது அன்பான சகோதரனே சகோதரியே, பிள்ளைகளே! பேருவகையோடு தூய ஆவியின் வருகையினைக் கொண்டாடுகின்றோம்....ஆனால் ஆவியானவர் அழைக்கும் சாட்சிய வாழ்வினை விட்டுச் சறுகி ஆவியானவரின் ஏவுதல்களை அறிய முடியாதவர்களாக மனம் குறுகி, பலவேளைகளில் அறிந்தும் செயல்படுத்த முடியாதவர்களாக மனம் இறுகி வாழ்ந்து கொணடிருக்கின்றோம். சிந்திப்போம்...சிந்திப்போம்... சீர்தூக்கிப் பார்ப்போம், கிறிஸ்தவ விசுவாசம் மட்டுப்படுத்தப்பட்ட கால கட்டத்தில் கட்டுப்பாடுகள், கலாபனைகள் மத்தியிலும் திருமறை திக்கெட்டும் பரவியது....ஆனால் மதச் சுதந்திரம் கிடைத்தது...இன்று எண்ணிலடங்கா பணியாளர்கள்... நன்று உருவாக்கப்பட்ட திருச்சபை நிர்வாகம், குலையாத சட்ட திட்டங்கள் இவை எல்லாம் இருந்தும் அப்போஸ்தலர் கால வளர்ச்சியோடு ஒப்பிடும் போது திருச்சபை எதிர்பார்த்த அளவு இன்னும் எட்டிப்பிடிக்க வில்லை எனலாம்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# உன் பாவங்களைத் தருவாயா...?

பூமியில் நீ வாழ
உனக்கு உயிர் கொடுத்தேன்
ஆறறிவும் கொடுத்து
அழியா ஆன்மாவும் தந்தேன்

இன்று நான் கேட்பதை
நீ எனக்கு தருவாயா?

நான் மல்லிகை கேட்கவில்லை!
குழந்தாய் உன்
மனதினைத் தருவாயா?

பொன் பொருள் வேண்டவில்லை!
அடுத்த அயலானை
அன்பு செய்வாயா?

எனை தாங்கும் படி சொல்லவில்லை!
மற்றவர்களை நீ
எப்பொழுதும் தாங்குவாயா?

விழிநீர் சிந்தும்படி உரைக்கவில்லை!
அடுத்தவன் கண்ணீரைத்
துடைத்து விடுவாயா?

எனை அன்பு செய்யக் கூறவில்லை!
உயிர்கள் அனைத்திற்கும்
உயிர் கொடுத்து வாழ்வாயா?

இறுதியாய் நான் கேட்கிறேன்
உன்னிடம் உள்ள
பாவங்களைத் தருவாயா? ............?

லி. லின்ரா சாந்தினி
சாவகச்சேரிப் பங்கு

## கவிதைச் சரம்

### இதயத்தால் வாழ்த்துகின்றோம்

இயற்கை எழில் தாலாட்டும்
காவலூர் துறை மண் பெற்றெடுத்த
எம் குலவிளக்கே தோமஸ்
ஆண்டகையே! - உன் தாயின்
கருவில் இருக்கும் போதே
நான் உன்னைத் தேர்ந்து கொண்டேன்
என்ற இறைவாக்கின் அத்திவாரமே!

அழைக்கப்பட்டவர்களோ பலர் ஆனால்
தேர்ந்து கொள்ளப்பட்டவர்களே சிலர் என்று
ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு
(1965-12-21) அமரர் எமிலியானுஸ் பிள்ளை
ஆண்டகையால் இறைபணியாளனாய்
திருநிலைப்படுத்தப்பட்ட எம் ஆயனே! சவுந்தரனே!

ஆழமான, அழகான பிரசங்கத்திற்கும்
குறும்பான பேச்சிற்கும் எடுத்துக் காட்டாய்
வாழ்ந்து, யாழ் மக்கள் மனதில்
நீங்கள் இடம் பிடிப்பவரே எம் மக்களுக்காய்
முப்பது வருட காலமாய் நீர் படும் துன்பம்
கொஞ்சமோ? உம் பணியால் இமயம்
தொட்டுவிட்டது எம் யாழ் திருச்சபை!.

உம் அரவணைப்பும் அன்பும்
சுயநலமற்ற பிறர்நல வாழ்வும்
இன்னும் பல காலங்கள் எமக்கு வேண்டும்
இறையாசீருடன் உம் பணி மலர
இதயத்தால் வாழ்த்துகின்றோம்.

காவலூர்
ற. றமில்டன்

## ஆதிபரன்! திருவடியை அலங்கரிக்கும் அருட்சுடரே!

ஆதிபரன்! திருவடியை அலங்கரிக்கும் அருட்சுடரே!
நீதிநெறி சமாதானம் நிலைக்கவழி நீர்தருவீர்.
ஐம்புலனும் உம்மையே அனுதினம் அஞ்சலிக்க
எம்பாவம் தீர்ப்பீர் எழில்நிறை வேந்தே?
பேரன்பு தேசபக்தி பெரும்பொறுமை தியாகசிந்தை
தாரணியில் எம்மரிய கருவிகளாய்த் தருவீர்.
அறிவாற்றல நெறியாக்க சொல்வமைதி ஊழியத்தில் இறைஞானம் நின்கொடைகள் பெருகும் சேரும்.
விண்வழித் மண்ணிலே தெய்வமே எம்மாண்பு வியத்தகு மாசின்றிக் தீபமே! காப்பீரே.
பேரதிர்ச்சி ஊருலக பெரும்துன்பம் மோதல்கள் பேரழிவு சூழாது நெருங்காது ஆழும்.
சந்தர்ப்ப நிந்தனைதன் சூழ்நிலையில் பெருகாது சந்திக்கும் நீரெம்மை சதிவலையில் ஆள்வீர்.

ஞா. அரியமலர்
மிருசுவில்


## விண்ணக வாழ்வின் 6 ஆண்டுகள் நிறைவில் நினைவஞ்சலி

### எவுசேனி அந்தோனி



அன்னை மடியில்
1932-12-27
ஆண்டவன் அடியில்
2005-06-25



சீவியத்தில் நேசித்தவர்களே!
மரணத்திலும் மறவாதீர்கள்.

ஆறாண்டுகள் கடந்ததம்மா
ஆறுதல்தான் அடையவில்லை - உங்கள்
அன்பு மொழியும் அரவணைத்த கரங்களும்
அசையாது என்றும் உள்ளது எம் மனதில் - எம்
ஆன்ம வாழ்விற்கு உரமிட்ட - உங்கள்
ஆன்மா சாந்தி அடைய வேண்டுகின்றோம்.

25-06-2011ல் தவசிக்குளம் புனித காணிக்கை மாதா ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு அன்னாரின் ஆன்ம சாந்திக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தவசிக்குளம்
கொடிகாமம்

Add-48/11

பாசமிகு
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# இறை அழைப்பின் குரலுக்கு பதிலுரைப்போம்

## உன்னுடன் ஒரு நிமிடம்



ஒரு மறைமாவட்ட குரு ஆயரின் தலைமையில் தனது அரச குருத்துவத்தோடு மறைமாவட்ட எல்லைக்குள் ஆண்டவரின் அழைப்பை ஏற்று அவருக்கு பணிபுரியவும் அவர் பாதத்தில் தனது பாதச் சுவடுகளை பதிக்கவும் தன் எல்லைக்குள் இருக்கும் மக்களுடைய மீட்புக்காக அர்ப்பணிக்கவும் அழைக்கப்பட்டவர்.

✝ அநேகமாக உனக்கு திருமுழுக்கு தந்தது ஒரு மறைமாவட்ட குரு.

✝ உன்னை ஒப்புரவு அருட்சாதனத்திற்கு தயாரித்தது ஒரு மறைமாவட்ட குரு.

✝ உனக்கு முதல் திருவிருந்து கொடுத்தது ஒரு மறைமாவட்ட குரு.

ஆண்டவரின் ஆவியை பெற்றிட ஏழைக்கு நற்செய்தி அறிவிக்க சிறைப்பட்டோரை விடுதலை செய்ய பார்வையற்றோருக்கு பார்வை தர செவிடருக்கு கேட்கும் திறன் வழங்க, ஒடுக்கப்பட்டோருக்கு வாழ்வு அளிக்க, நலிந்தோரை நலம் பெறச் செய்ய, இருளை அகற்றி ஒளியைப் பரப்ப, தீமையை நன்மையாக்க, பிடுங்கவும் நடவும், தகர்க்கவும் கட்டவும் ஆண்டவர் உன்னை அழைக்கிறார். உனது பதில்?

**தொடர்புக்கு: இறையழைத்தல் இயக்குனர் - ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## புறப்படு!......

என் பின்னே வாருங்கள்
உங்களை
மனிதரைப் பிடிக்கச் செய்வேன்
இது இயேசுவின் வார்த்தைகள்

மனிதம் தொலைந்த வாழ்வு
மங்களமாய் நகர்கிறது

பட்டப்பகலில்
விளக்கேற்றி
மனிதனைத் தேட வேண்டிய
நிர்ப்பந்தம்.

வட்டமாய்
வலைவிரித்து
மூச்சிரைக்க இழக்க
வெறும் வலைதான்
கரை வருகிறது.

கடுகுமணி ஊன்றி
நீரூற்றி
காத்திருந்தோம்
முளையையும் காணவில்லை

வானத்துப் பறவைகள்
பாவம்
தாவர பறவைகள்
பாவம்
தாவாத வழியின்றி
கடும்வெயிலில்
தொடர்ந்தும் சிறகடிக்கின்றன

ஏரில் கைவைத்து
பின் திருப்பிப் பார்ப்பவனும்
தந்தை தாய் தேடி
விடை சொல்லச்
செல்பவரும்
தந்தையைப் புதைக்க
குழி தோண்டும்
மைந்தர்களும்
மலிந்து விட்டார்.

தொலைந்தது நான்
தேடுவோர்
அருகிவிட்டடார்.

புறப்படு நீயேனும்
தொலைந்த ஓராட்டையும்
தேடியவர்
வழியில்.

அருட்பணி
ம.வி.இ. இரவிச்சந்திரன்

விண்ணக வாழ்வின்
41ஆம் வருட நினைவு



அன்னை மடியில் 06-10-1962 ஆண்டவன் மடியில் 26-06-1970

மரியம் சர்மினி சில்வேஸ்ரர்

ஆண்டுகள் முப்பத்தேழாகியும்
நின் நினைவுகள் எம் நெஞ்சங்களை
நனைக்கின்றன.

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்.

சுருவில்

Add-46/11

## புனித இயூஜின் டி மசனட் - இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் 3வது ஸ்தாபகர்

சென்ற இதழ் தொடர்ச்சி...

"மார்சேய் (Marseiles) நகருக்குச் செல்லுங்கள். அங்கு ஒரு ஆயர் உள்ளார். அவர் நிறுவிய சபை சிறியது தான், ஆனால் அந்த நிறுவுனரின் இதயம், புனித பவிலுடையது போல உலகளவிற்குப் பெரியது. அவரிடம் சென்று இது ஒரு அனாதரவாகத் தவிக்கும் ஆன்மாக்களைக் காப்பாற்றும் விடயம் என்ற கருத்தை அவரது மனதில் பதியப்பண்ணுங்கள். அவ்வாறு செய்தீர்களாயின் உங்கள் விண்ணப்பத்தை அவரால் தட்டிக்கழிக்கவே இயலாது. (எப்பாடுபட்டாவது உங்களுக்குத் தனது சபையின் மறைப்பணியாளரை என்ற பொருட்பட)" என்று கூறினார்.

ஆயர் பெற்றக்கீனி, புனித யூஜின் டி மசனட்டுடன் தங்கியிருந்தார். இந்நாடகளில் வடபகுதியை மட்டுமல்ல முழு இலங்கையின் அப்போதைய கத்தோலிக்க திருச்சபையின் நிலையையும், அவசர தேவைகளையும் தெளிவாக விளக்கியிருக்க வேண்டும். பின்னர் ஆயர் புனித யூஜின் டி மசனட் எழுதிய சில கடிதங்களிலிருநதும் நாம் அறியக் கூடியது யாதெனில், ஆயர் பெற்றக்கீனியின் வடபகுதித் திருச்சபைக்கான கவலைகளை அவர் முழுமையாக உள்வாங்கியிருந்தார் என்பது மட்டுமல்ல. வருங்கால முழு இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் வளமைக்கும், தனது சபை காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற தூர நோக்கும், அவரது உள்ளத்தில் உருவாகியிருந்தது.

ஆயர் புனித யூஜின் டி மசனட் எழுதியவொரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "இதோ, எங்கள் முன்னே, எங்கள் பணிக்கென ஒரு மறைத்தளம் ஆயத்தமாக உள்ளது!

அருட்திரு S.V.P.மங்களராஜ்,
விரிவுரையாளர்.

உலகின் மிகவும் அழகான இந்த நாட்டில் (இலங்கையில்), ஒன்றரை மில்லியன் அஞ்ஞானிகள் கத்தோலிக்க சமயத்திற்கு மாறுவதற்கான ஏது நிலையுள்ளது. ஒன்றரை இலட்சம் கிறிஸ்தவர்களுக்கு முறையான மறைக் கல்வி புகட்டப்பட வேண்டிய தேவையுள்ளது. இங்குள்ள மக்கள் இயற்கையிலே நல்ல சுபாவமும் நற்பண்புகளுமுள்ளவர்கள். இறை பணியாளர்கள் அறிவிக்கும் நற்செய்தியை, அமைந்த உள்ளத்துடன் செவிமடுக்கக் கூடியவர்கள். மறுபக்கத்தில் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகளுக்கெதிரான பேதகக்கருத்துக்களை பரப்புவதோடும், இங்கு துடிப்புடன் செயல்படுவதால், இம் மக்களை இவர்களின் பிடியிலிருந்தும் காப்பாற்ற வேண்டிய தேவையுமுள்ளது. இப்படியான பாரிய அவசிய தேவைகளுக்குதவும் படி விண்ணப்பம் வரும் போது எவ்வாறு உதவாதிருக்க முடியும்? எனவே உலகின் மிகவும் அழகான பகுதியில் உள்ள இந்த மறைத் தூதுப் பணியை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நான் முன் கூட்டியே சொல்லக் கூடிய தென்னவெனில், ஒரு நாள் இப்பெரிய தீவின் மறைப்பொறுப்பு முழுவதும் எங்கள் சபைவசம் ஒப்படைக்கப்படும் என்பதும், எங்கள் சபை, ஒருநாள் இத்தீவு முழுதையும் ஒரு நல்ல புனித பூமியாக மாற்றும் என்பதுமாகும்".

ஆயர் புனித யூஜின் டி மசனட்டின் நடவடிக்கைகள் தூர நோக்குடன் அமைந்திருந்தன என்பதற்கு, இலங்கையைப் பொறுத்தளவில் தமது சபைக் குருக்கள், பெற்றக்கீனி ஆண்டகையின் ஆழுகைக்குட்பட்ட பகுதியிலேயே பணிபுரிய வேண்டுமென்ற நிபந்தனையை விதித்தமை, இன்னுமொரு உதாரணம்.

## கொழும்பு மரியாயின் சேனையின் "கிறிஸ்துவுக்காக அலைதல்" - பயணம் -



கடந்த மே 17-18ம் திகதிகளில் பரிகார மாதா கொமிற்சியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிறிஸ்துவுக்காக அலைதல் பணி அக்கரைப்பற்று, புனித ஆரோக்கிய மாதா ஆலய பங்கில் நடைபெற்றது. 16ம் திகதி இரவு கொமிற்சிய ஆன்ம இயககுனர் அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே அவர்களின் ஆசீருடன் கிராண்ட்பாஸ் புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து இப்பயணம் ஆரம்பமானது.

57 சேனையாளர்கள் பங்குபற்றிய பயணத்தில் நீர்கொழும்பு அற்புதமாதா கியூரியாவிலிருந்து 10 பேரும், திருச்செபமாலை மாதா கியூரியாவிலிருந்து 8 பேரும் கலந்து கொண்டனர்.

இப்பயணத்தின் போது இளையோர் பிரசீடியமொன்றை அங்கு உருவாக்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இவ் நிகழ்வுகளில் கல்முனை கியூரியாவின் ஆன்ம இயக்குனர் அருட்பணி. அம்புரூஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## புரியாதவற்றை புரியவைக்க.......(6ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு காரணம் என்ன? ஏது குறை? எப்படி இந்த நிலை? எனச் சிந்திக்கின்றபோது சாட்சிய வாழ்வுக் குறைபாடும், இன்றைய மனிதர்களாகிய நாங்கள் ஒற்றுமையில் வாழாமலும், அப்போஸ்தலர்களைப் போன்று எல்லாவற்றையும் எல்லோருக்கும் பொது எனக் கொள்ளாமலும் வாழ்கின்ற வாழ்க்கையே காரணமாகும். ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் சமுதாய நீரோட்டத்தில் இழுபடாமல் சாட்சிகளாக வாழ்ந்தாகள்...ஆனால் இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் இலக்கைத் தவறவிட்டவர்களாக பல வேளைகளில் வாழத் தொடங்கிவிட்டதும் இன்னுமொரு காரணமாகின்றது. அடுத்தது அப்போஸ்தலர்கள் தொடர்ச்சியாக இறைவேண்டலில், செபத்தில் இறைவனோடு ஆவியின் வரத்தினால் நிலைத்திருந்தார்கள், எல்லா முடிவுகளையும் செபத்தில் எடுத்தார்கள். இந்தப் பண்பு இப்போது அருகிவிட்டதும் காணாமல் போனதும் இன்னுமொரு முக்கியமான காரணமாகும்.

ஆவியானவர் வந்து அப்போஸ்தலருக்கு புரியாத பல விடயங்களைப் புரியப்பண்ணினார், முடியாது என நினைத்தவற்றை முடித்துக் கொடுத்தார். நாமும் எம்மீது அக்கினியின் ஆவியானவரின் வரம் பொழியப்பட்டு புரியாதவை புரிந்து, தெரியாதவை தெரிந்து, உண்மைச் சாட்சிய வாழ்வின் மையங்களாக வாழ வரம் வேண்டி அனைவருக்கும் இறையருள் கிடைக்கச் செபித்து தூய ஆவியானவரின் இப் பெருவிழாவை அர்த்தமான முறையில் கொண்டாடுவோம். எல்லா மக்களுக்கும் அமைதியும் அருளும் நிறையட்டும்.

**வாரும் தூய ஆவியே வாரும்!**

விண்ணக வாழ்வில் 5 ஆண்டு நிறைவு



விக்ரர். சுஜீன்தினி

33 நாவலர் வீதி
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

Advt-48/11

அன்னை மடியில்
03-03-1979

இறைவன் மடியில்
02-07-2006

பாரினில் வாழ்வது பாவமென்றா
பரமன் உன்னை அழைத்து விட்டான்?
பரிதவிக்கும் எம்மவர்க்காய்
பரிந்து பேசவா சென்று விட்டாய்?
துடிக்குதம்மா எம் இதயம்
பெருகுதம்மா கண்ணீர் கடல்
மாறுமோ எம் இதயத்தின் காயங்கள்
நித்தம் நித்தம் உன் நினைவில்
வாடி வதங்குகின்றோம் நாங்கள்.

உம் நினைவால் வாடும்
S. விக்ரர் பிரகாசியம்மா,
(அன்ரன் தேவமனி)
சகோதரங்கள் (பெற்றோர்)

PUBLIC LIBRARY
JAFFNA



# பெல்ஜியம் பனுமாதா ஆசிய யாத்திரையில் யாழ் ஆயர்



சென்ற மாதம் 27ம் திகதி யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பெல்ஜியம் பனுமாதா ஆலயத்திற்கு ஓர் யாத்திரை மேற்கொண்டார். ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொண்டு ஜேர்மன் நாட்டில் உள்ள தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தையும் அதற்கு பொறுப்பாக உள்ள அருட்பணி ஏ. எப் பெனற் அடிகளையும் ஆயர் சந்தித்தார். பின்னர் கொலண்ட நகருக்கு சென்ற ஆயர் அங்கிருந்து பெல்ஜியம் நாட்டில் தென்பகுதியில் அமைந்துள்ள பனுமாதா யாத்திரைத் தலத்திற்கு சென்று அங்கு தங்கியிருந்து கூடியிருந்த யாத்திரிகருக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

பெல்ஜியத்தில் மரியன்னை தரிசனம் கொடுத்த பிரதேசத்தில் இப் பனுமாதா ஆலயம் அமைந்துள்ளது. அன்னை காட்சி கொடுக்கும் போது "நான் ஏழைகளின் கன்னி" என்று வெளிப்படுத்தியமையால் இவ்வாலயம் ஏழைகளின் கன்னி ஆலயம் ("I am the virgin of the poor") என அழைக்கப்படும்.

28ம் திகதி ஐரோப்பாவின் பல பகுதிகளில் இருந்தும் தமிழ்பேசும் ஏராளமான மக்கள் சொகுசு பஸ்களிலும் கார்களிலும் வந்து ஆயிரக் கணக்கில் கூடினர்.

அழகிய புற்தரைகளும் மரங்களும் கொண்ட முற்ற வெளியில் அமைக்கப்பட்ட இவ் ஆலய மண்டபங்களில் கூடி ஆராதனைகளில் ஈடுபட்டனர். அன்று மாலை 4.00 மணிக்கு யாழ் ஆயர் தலைமையில் பல குருக்களுடன் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது.

அதன் முடிவில் நற்கருணை பவனியும் பனுமாதாவினுடைய திருச்சொரூப பவனியும் இடம்பெற்றன. நீல சேலை அணிந்த இளம் தமிழ் பெண்கள் பனுமாதாவின் திருச்சொரூபத்தை தாங்கி நாதஸ்வர இசையுடன் தமிழ் பக்திப்பாடல்களை இசைத்துக்கொண்டு அருட்சுரக்கும் அற்புத நீரண்டை வந்து இறையாசீர் பெற்றனர்.

இத்திருவிழாவினை பனுமாதா ஆசிய யாத்திரைகள் ஒன்றியம் ஒழுங்கு செய்து யாழ் ஆயரை இவ்வாண்டு வரவழைத்து திருவிழா கொண்டாடியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழகத்தின் ஆயர்களை திருத்தந்தை சந்தித்தார்.

ஐந்தாண்டிற்கு ஒரு முறை இடம் பெறும் 'அட்லிமினா' சந்திப்பையொட்டி தமிழகத்திலிருந்து உரோம் நகர் வந்துள்ள இரு பேராயர்களையும், ஐந்து ஆயர்களையும், ஒரு துணை ஆயரையும் இவ்வியாழன் காலை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடினார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

# யாழ் அமல மரித்தியாகிகளின் புதிய நிர்வாகம்

யாழ் மாகாண அமதிகளின் புதிய மாகாண முதல்வராக மீள் நியமனம் செய்யப்பட்ட அருட்பணி ம. போல் நட்சத்திரம் அடிகளாரின் நிர்வாக ஆலோசகர்களாக அருட்பணி ஸ்ரனிஸ்லோஸ் பிலிப்ஸ் அமதி, அருட்பணி டேவிட் வின்சன்ட் பற்றிக் அமதி, அருட்பணி ஜெறோம் வெலிச்சோர் அமதி, அருட்பணி அ. பிரான்சிஸ் லொசிங்ரன் அமதி, அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக் அமதி ஆகியோர் உரோமையிலுள்ள அமதிகளின் சிரேஸ்ட தலைவரினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தம் பணியை மே மாதம் முதல் ஏற்றுள்ளனர்.

# அனைவரையும் அரவணைத்துச் செல்வதே திருச்சபையின் உண்மைப் பண்பு - திருத்தந்தை



பெந்தகோஸ்து திருவிழாவான கடந்த ஞாயிறன்று உரோம் நகர் தூய பேதுரு பேராலய வளாகத்தில் விசுவாசிகளுக்குத் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை, திருச்சபையை அனைத்து மக்களின் திருச்சபையாக, தூய ஆவியார் எவ்விதம் உருவாக்கினார் என்பது குறித்து மறையுரையாற்றினார். திருச்சபை என்பது அனைத்து இனப்பிரிவுகள், வகுப்புப் பிரிவுகள், நாடுகள் என்ற எல்லைகளையெல்லாம் தாண்டி, தன் துவக்கக் காலத்திலிருந்தே அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஒன்றாக உள்ளது என்ற திருத்தந்தை, அதுவே அதன் உண்மை பண்பு என்பது அனைவராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றார்.

'ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்' என்ற விவிலிய வார்த்தைகளை எடுத்துரைத்து, இந்த மகிழ்ச்சி என்பது ஏதோ ஒரு மகிழ்ச்சில்ல, மாறாக, தூய ஆவியாரின் கொடையான முழு மகிழ்ச்சி என்றார் திருத்தந்தை.

சீடர்களைப் போல் நாமும் இயேசுவை விசுவாசத்தில் காண முடியும், ஏனெனில் அவர் விசுவாசத்தில் நம் முன் வந்து. தன் காயங்களைக் காட்டுகிறார் என்ற பாப்பிறை, நாமும் இறைவனின் பிரசன்னம் எனும் கொடைக்காக வேண்டுவோம். அபபோது மிக உன்னதக் கொடையான மகிழ்ச்சியைப் பெறுவோம் என்று உரைத்தார்.

பெந்தகோஸ்து விழாவில் நாம் சிறப்பித்த தூய ஆவி, அகிலத்தையும் நிறைத்து, நாடுகளிடையே ஐக்கியத்திற்குத் தயாரிப்பாராக என, அன்று மூவேளை செப உரையின் போது நம்பிக்கையை வெளியிட்டார் திருத்தந்தை.

பாஸ்கா மறையுண்மையின் நிறைவாக தூயஆவி அன்னை மரியோடு கூடியிருந்த திருத்தூதர்கள் மீது இறங்கி வந்தது. திருச்சபைக்கான திருமுழுக்காக இருந்தது எனவும் கூறினார் அவர்.

# லண்டனில் ஒலிம்பிக் போட்டிகளின் போது நோவா பேழை

பழைய ஏற்பாட்டின் பெள்ளப் பெருக்கின்போது நோவா உருவாக்கிய ஒரு பேழையைப் போன்று ஒரு பெரிய பேழையை அடுத்த ஆண்டு லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளின்போது தாமிஸ் நதியில் மக்களின் பார்வைக்கு வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டச்சு நாட்டைச்சேர்ந்த பொறியியலாளர் ஜொகான் கூயிபெர்ஸ் நோவா அமைத்த பேழையைக்குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டு அதன் பயனாக மூன்று ஆண்டுகளுக்கு முன் ரொட்டம் அருகில் டொரட் என்ற நதியில் நோவா காலத்துப் பேழையை மீண்டும் உருவாக்கியுள்ளார்.

10இலட்சம் பவுண்ட் அதாவது 4கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்ட இந்தப்பேழை ஏறத்தாழ நோவா காலத்தில் உருவான பேழையின் அளவில் உள்ளதென்றும் இதை லண்டனில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளின் போது தாமீஸ் நதியில் மிதக்க விடுவதற்கு இலண்டன் நகர் மேயர் ஒப்புதலை கேட்டிருப்பதாகவும் பொறியியலார் கூயிபெர்ஸ் ஆங்கிலக் கத்தோலிக்கப் பத்திரிகை ஒன்றுக்கு அண்மையில் அளித்த பேட்டியில் கூறினார்.


நோவா காலத்துப் பேழையைப் பற்றி மக்களுக்கு, முக்கியமாக இளையோருக்குச் சொல்வதால் கடவுள் இருக்கிறார் என்ற உண்மையை அவர்கள மனதில் விதைக்க முடியும் என்பதே இக்காட்சிபடுத்தலின் நோக்கமாகும்.

# பிரிவும் வரவும்



அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்

கடந்த இரண்டு ஆண்டு காலமாக 'பாதுகாவலன்' பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பேற்று தமது சிறிய குருமட அதிபர் பணியின் மத்தியிலும் பத்திரிகை ஆசிரியராக அரும் பணியாற்றி விடைபெறும் அருட்தந்தை அவர்களுக்கு எமது இதய நன்றிகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.



அருட்பணி எயின்சிலி றொஷான்

கடந்த இரண்டு ஆண்டு காலமாக சென்னை லொயோலா கல்லூரியில் பத்திரிகையியல் ஊடக கலைகள் துறையில் முதுமானி பட்டப்படிப்பை நிறைவு செய்து கொண்டு 'பாதுகாவலன்' பத்திரிகையின் புதிய ஆசிரியராக பணி ஏற்கும் அருட்தந்தை அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

**உங்கள் பணி சிறக்க எங்கள் நல்வாழ்த்துக்களும் செபங்களும்**

**முகாமையாளர், பணியாளர்கள்**

**புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்**

# சொந்த முயற்சியினால்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவல் இதனை முதலில் பூர்த்தி செய்ய வேண்டும்.

அனேகமான மக்கள் தொடர்ந்தும் கூடாரங்களிலும் தற்காலிக இடங்களிலும் தங்கியுள்ளனர். அவர்கள் முன்பிருந்த இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப இன்னமும் 25 ஆண்டுகள் தேவைப்படும். கத்தோலிக்க திருச்சபையின் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வலைப்பாடு, இரணைமடுநகர் போன்ற இடங்களில் 50 வீடுகளை கட்டிமுடித்து பயனாளிகளிடம் கையளித்துள்ளது. இது போன்று முல்லைத்தீவிலுள்ள செல்வபுரப் பகுதியில் அண்ணளவாக 100 வீடுகள் திருத்தப்பட்டும் புதிதாகக் கட்டியும் முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அரசசார்பற்ற சில நிறுவனங்களின் உதவிகளுடன் மாத்திரமே பாதிக்கப்பட்ட மக்கள் உதவிகளை பெறுகினறனர். அரசாங்கம் வழங்கும் உதவிகள் போதியதாக இல்லை என்று ஆயர் கூறினார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2011 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.